(8) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தனியார் அலுவல் நாளில் வேறு அரசு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற விதிகளின்படி ஒவ்வொரு வியாழக்கிழமையையும் தனியார் அலுவல்களுக்காக ஒதுக்க வேண்டுமென்று இருக்கிறது. இந்த வாரம் அந்த வியாழக் கிழமையை மாற்றி வெள்ளிக்கிழமை என்று வைத்திருக்கிறோம். இன்றையதினம் தனியார் அலுவல்கள் இருந்தும் 11-40 வரை அரசாங்க அலுவல்களையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் உரிமைப் பிரச்சினைகளை எல்லாம் எடுத்துக்கொண்டுவிட்டு—இப்போது தனியார் அலுவலை எடுத்துக்கொள்கிறபோது இதற்கு நேரம் மிகவும் குறைந்து விடுகிறது. இப்படித் தனியார் அலுவல் தினத்தில் மற்ற அலுவல்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, இதற்கான நேரத்தை குறைப்பதில் பயனில்லை. இனிமேலாவது ஒவ்வொரு வியாழக்கிழமையும் கட்டாயம் தனியார் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும், தனியார் அலுவல் தினத்தில் வேறு அரசாங்க அலுவல்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தாங்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி, ஏகமனதாக எடுத்த முடிவு. அந்த ரூலிலேயே

"Provided however, that where a Thursday has been so taken over for the transaction of Government business under the above proviso, the Speaker may allot in lieu thereof any other day for the Private Members' Business."

என்று இருக்கிறது. அதனால் இன்றைக்கு தனியார் அலுவல்களை எடுத்துக்கொள்வதில் தவறு இல்லை.

"All Thursdays should be set apart for Private Members' Business".

என்று நமது கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து முடிவு எடுத்தால் அப்படிச் செய்யலாம்.

(9) தனியார் அலுவல்கள்.

தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட முன்வடிவு — தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிக் கட்டுதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/74).

திரு. அழகர்சாமி தொடர்ந்து பேசலாம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதை அறிமுகப்படுத்தும்போது பல விவரங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக நம் இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள் அதிகமாகக் கடன் சுமையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை புள்ளி விவரங்களில் இருந்து தெரிந்து கொள்கிறோம். அதுவும் இன்று ஏறக்குறைய இவர்கள் 500 கோடி ரூபாய் வரை கடன் சுமையினால் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இதில் குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், சர்க்கார் கடன் ஆகியவை மொத்தமே 25 சதவிகிதம்தான் இருக்கும். மீதி பெரும் பகுதி தனியார்களிடத்தில் பட்டுள்ள கடன்களாகவேதான் இருக்கின்றன. அதுவும் சென்ற ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சிக்குப் பிறகு மேலும் பலர் புதிய கடனாளியாக, பழைய கடன்களை, வட்டியைக் கூடக் கட்ட முடியாதவர்களாகத்தான் ஆகியிருப்பார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற பெருந் தொல்லையாக இருக்கின்றது.

இதை நிவர்த்திக்க ஆரம்ப காலத்தில் இருந்தே பல நடவடிக்கைகள் பல சர்க்கார்களால் எடுக்கப்பட்டு வந்திருக் கின்றன என்றாலும் கூட சரியான நிவாரணம் கடன்பட்ட மக்களுக்கு ஏற்படவில்லை.

இதற்கு முன்னாலேயே இது சம்பந்தமாகக் கூறியிருக்கிறேன். 1937 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் முதல் அமைச்ச ராக வந்தபோது ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனால் சிறிது நிவாரணம் அப்போது ஏற்பட்டது என்பது உண்மை. அதை முன்பே சொல்லியிருக்கிறேன். காரணம், அப்போது